C.O.S.No. 05-2023 தேதி – 12.09.2025

வா.சா.1. –கண்ணன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

1ம் பிரதிவாதியின் கம்பெனிக்கு சப்ளை செய்யப்பட்ட பிலிமில் பிரச்சனை ஏற்பட்டது என நான் கூறியுள்ளது பிலிமில் கசிவு ஏற்பட்டது. அதற்கு காரணம் 1ம் பிரதிவாதியின் கம்பெனி இயந்திரத்தின் பாராமீட்டரை மாற்றம் செய்ததால் ஏற்பட்டதாகும். 10.12.2018ம் தேதியிட்ட இன்வாய்ஸ் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டபோது நான் 1ம் பிரதிவாதியின் தொழிற்சாலைக்கு சென்று ஆய்வு செய்யவில்லை. 10.12.2018ம் தேதியிட்ட இன்வாய்ஸில் கொடுக்கப்பட்டுள்ள பிலிம்ஸிலும் கசிவு ஏற்பட்டதாகத்தான் 1ம் பிரதிவாதியின் கம்பெனியில் கூறினார்கள். 20 டன் பிலிமை பயன்படுத்திய பிறகுதான் அவ்வாறு கூறினார்கள். 10.12.2018ம் தேதியிட்ட இன்வாய்ஸ் சம்பந்தமான பிலிம்ஸில் ஏற்பட்ட கசிவை ஏற்றுக்கொண்டுதான் நாங்கள் டெபிட் நோட்டு கொடுத்தோம். ரிஜக்ட் செய்யப்பட்ட 431 கிலோ பிலிம்சை தவிர பிற பிலிம்ஸ்க்கு 1ம் பிரதிவாதி கம்பெனியில் இருந்து பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. 431 கிலோ பிலிம்சை எங்கள் கம்பெனியில் திரும்ப பெறப்படவில்லை.

02.08.2019ம் தேதி அன்று அனுப்பிய பிலிம்சில் பிரச்சனை இருப்பதாக 1ம் பிரதிவாதியின் கம்பெனியில் இருந்து மின்னஞ்சல் எங்கள் கம்பெனிக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த மின்னஞ்சலில் பாராமீட்டரை பலமுறை மாற்றியும், டெம்பரேச்சரை பலமுறை மாற்றியும் பிரச்சனையை சரிசெய்யமுடியவில்லை என குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கம்பெனியில் இருந்து வாதி கம்பெனியில் இருந்து ஒரு நபரை அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்கள் என்றால் சரிதான். வ.சா.ஆ 7 ன் மூலம் எங்கள் கம்பெனியில் இருந்து ஒரு மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. அந்த மின்னஞ்சலில் பிலிம்சை 7 நாட்கள் பயன்படுத்தி பார்க்குமாறு 2ம் பிரதிவாதியால் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எங்கள் கம்பெனியின் மார்கெட்டிங் மேனேஜர் ஆவார். 1ம் பிரதிவாதி கம்பெனிக்கும் வாதி கம்பெனிக்கும் இடையே இடைத்தரகராக அவர் செயல்பட்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அனுப்பும் மின்னஞ்சல்கள் அனைத்தும் வாதி கம்பெனியை கட்டுப்படுத்தும்

என்றால் மின்னஞ்சல் அனுப்பிவிட்டு தகவல் தெரிவிப்பார். வா.சா.ஆ 7 ஆவணம் மின்னஞ்சல் அனுப்பியது சம்பந்தமாக வாதி கம்பெனியில் இருந்து எந்த ஆட்பேசணையும் தெரிவிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

எங்களுக்கும் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கும் உள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேறு கம்பெனியிலிருந்து பிலிம்கள் வாங்கக்கூடாது என ஒப்பந்தம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். இயந்திரங்களின் வேகம், மற்றும் டெம்பரேச்சர் இயந்திரத்தில் எந்த அளவில் இருக்கவேண்டும் என வாதி கம்பெனிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே எந்த விதமான எழுத்துபூர்வமான ஒப்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். ஆனால் அவர்கள் தெரிவித்திருக்க வேண்டும். பிரச்சனை ஏற்பட்ட பிறகு நான் 13.08.2019 அன்று தொழிற்சாலைக்கு செல்வதாக 2ம் பிரதிவாதி மின்னஞ்சல் அனுப்பினார். 13.08.2019 அன்று என்னால் செல்லமுடியாது என்றும், 16.08.2019 மற்றும் 17.08.2019 அன்று தான் செல்லமுடியும் என்று வா.சா,ஆ 9 மூலம் என்னால் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. எங்கள் கம்பெனியில் இருந்து நான் ஆய்வுக்கு வரும்வரை பிலிம்சை பயன்படுத்தக்கூடாது என்று எந்த விதமான மின்னஞ்சலும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா,ஆ 10 மூலம் 1ம் பிரதிவாதி கம்பெனியின் சமர்ப்பன் தொழிற்சாலையில் இருந்து மிஷின் மேனுபாக்சரர் ஆய்வுக்காக இருப்பதாகவும், தங்களுடைய காலதாமதத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. வா.சா,ஆ 10 ஆவணத்தில் நாங்கள் சப்ளை செய்த பிலிம்சை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

வா.சா,ஆ 11 ஆவணம் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு 2ம் பிரதிவாதியால் அனுப்பப்பட்ட மின்னஞ்சல் என்றால் சரிதான். வா.சா,ஆ 11 என்னுடைய மின்னஞ்சலுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. 16.08.2019 ஆய்வு செய்தபிறகுதான் வா.சா,ஆ 11 மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. வா.சா,ஆ 11 ஆவணத்தில் சப்ளை செய்யப்பட்ட பிலிம்சில் கசிவு அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் வா.சா,ஆ 11 ஆவணத்தில் ஆய்வு செய்யும் சமயத்தில் நான் உடனிருந்ததாகவும், கசிவு இருந்ததை ஒத்துக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஆனால் மின்னஞ்சலில் சொல்லப்பட்ட இந்த விபரத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வா.சா.ஆ 11 யை பெற்றபிறகு அதில் உள்ள சங்கதிகளை மறுத்து என்னால் மின்னஞ்சல் எதுவும் அனுப்பப்பட்டதா என்றால் என்னால் அனுப்பப்படவில்லை . எனது உயர் அதிகாரியால் அனுப்பப்பட்டது. வா.சா,ஆ 11 க்கு பதில் அனுப்பிய மின்னஞ்சல் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா,ஆ 14 நான் அனுப்பிய பதில் மின்னஞ்சலா என்றால் இல்லை. அதற்கு முன்பு ஒரு மின்னஞ்சல் அனுப்பியுள்ளோம். வா.சா,ஆ 14 க்கு முன்பு நான் அனுப்பிய மின்னஞ்சலை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

நான் ஆய்வு செய்தபின்பு 1ம் பிரதிவாதி கம்பெனியில் இருந்து வா.சா,ஆ 12 அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வா.சா,ஆ 12 ஆவணத்தில் அனுப்பப்பட்ட பிலிம்கள் முற்றிலுமாக பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லை என்று அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதற்கு நான் உடன்படவில்லை. வா.சா,ஆ 12 ஆவணத்தின் ஒரு நகல் என்னுடைய மின்னஞ்சலுக்கும் அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது.

நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள மின்னஞ்சல்கள் அனைத்தையும் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. எனக்கு அனுப்பப்படும் மின்னஞ்சல்கள் எதையும் நான் படித்துப்பார்க்கமாட்டேன். ஏனென்றால் அது எனக்குத் தேவையில்லை. 16.08.2019 அன்று ஆய்வு செய்தபிறகு ஸ்டாக்குகளை திரும்ப பெற்றுக்கொள்ளுமாறு 1ம் பிரதிவாதி கம்பெனியில் இருந்து அனுப்பப்பட்ட மின்னஞ்சல்கள் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

நான் ஆய்வு செய்யும்போது 1ம் பிரதிவாதியின் கம்பெனியில் இருந்து மற்ற சப்ளையர்கள் கொடுக்கும் பிலிம்களில் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், எங்கள் கம்பெனியில் இருந்து சம்ளை செய்யப்பட்ட பிலிம்சில் மட்டும் பிரச்சனை இருப்பதாக கூறினார்கள் என்றால் சரியல்ல. நான் ஆய்வு செய்தது சம்பந்தமாக ஆய்வறிக்கை எதுவும் தயார் செய்யவில்லை என்றால் ஆய்வு செய்வதற்கு 1ம் பிரதிவாதி கம்பெனியில் இருந்து எந்த ஒத்துழைப்பும் செய்யாததால் நான் ஆய்வே செய்யவில்லை.

எனது நிரூபண வாக்குமூலத்தில் ஆய்வு செய்தபோது 230 பவுச்சுகளில் ஒரு பவுச்சில் மட்டுமே கசிவு ஏற்பட்டதாக கூறியுள்ளது ஆய்வு செய்யாமல் செய்யப்பட்டதா என்றால் அது 17.08.2019 அன்று செய்யப்பட்ட ஆய்வு ஆகும். 17.08.2019 அன்று நான் ஆய்வு செய்தபின் ஆய்வறிக்கை ஏதேனும் தயார் செய்தேனா என்றால் 1ம் பிரதிவாதி கம்பெனியில் இருந்து அவ்வாறு ஆய்வறிக்கை கேட்காததால் நான் ஆய்வறிக்கை தயார் செய்யவில்லை. நான் வாதி கம்பெனிக்கு ஆய்வறிக்கை அனுப்பினேனா என்றால் எழுத்துபூர்வமான அறிக்கை எதுவும் கொடுக்கப்படவில்லை. தொலைபேசி மூலமாக தெரிவித்தேன். 17.08.2019 அன்று நான் ஆய்வு செய்த பின்பு 1ம் பிரதிவாதி கம்பெனிக்கும் வாதிக்கும் ஏற்பட்ட மின்னஞ்சல் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

வா.சா,ஆ 15 எனது கம்பெனியில் இருந்து 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் என்றால் சரிதான். வா.சா,ஆ 15 மின்னஞ்சலில் 1ம் பிரதிவாதி கம்பெனியில் உள்ள இயந்திரத்தில் வேகத்தை குறைத்து பிலிம்சை பயன்படுத்துமாறும் எங்களது கம்பெனியின் இன்ஜினியரின் அறுவுறுத்தலை பின்பற்றுமாறும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா,ஆ 15 மின்னஞ்சலில் இயந்திரத்தின் வேகத்தை குறைத்து செயல்படுத்துவதால் 1ம் பிரதிவாதிக்கு ஏற்படும் இழப்பை வாதி கம்பெனி சரி செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 15ல் 230 பவுச்சுகளில் ஒரு பவுச்சில் மட்டும் கசிவு இருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளோம். வா.சா.ஆ. 15 ல் பின்வரும் காலகட்டங்களில் 1ம் பிரதிவாதியின் கம்பெனிக்கு ஏற்றாற்போல் பொருட்கள் சப்ளை செய்யப்படும் என்று ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.16 1ம் பிரதிவாதி கம்பெனியால் எங்கள் கம்பெனிக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ல் நான் ஆய்வுக்கு சென்றபோது எந்த ஆய்வறிக்கையிலும் கையெழுத்து போடுவதற்கு மறுத்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16 க்கு நான் ஆய்வறிக்கையில் கையெழுத்திட மறுக்கவில்லை என்று எந்த மறுப்பும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 மின்னஞ்சல் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

ஆய்வறிக்கை எதுவும் அவர்கள் என்னிடம் கேட்கவில்லை.

16.08.2019 மற்றும் 17.08.2019 அன்று 1ம் பிரதிவாதியின் கம்பெனியில் நான் ஆய்வுக்கு சென்ற சமயத்தில் பிலிம்களில் அதிக கசிவுகள் ஏற்பட்டதால் தான் நான் எந்த ஆய்வறிக்கையும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. 16.08.2019 மற்றும் 17.08.2019 ஆகிய தேதிகளில் இருந்து சப்ளை செய்யப்பட்ட பிலிம்சை திரும்ப பெற்றுக்கொள்ளுமாறுதான் எங்கள் கம்பெனிக்கு தகவல் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். பலமுறை தகவல் அனுப்பியும் பிலிம்சை திரும்ப எடுப்பதற்கு எங்கள் கம்பெனியில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சாம்பிள் பிலிம் கொடுத்துதான் இன்வாய்ஸ் ஆர்டர் செய்யவேண்டும் என்று எந்த ஒப்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். ஆனால் இயந்திரத்தில் மாற்றம் ஏற்பட்டதால் சாம்பிள் பிலிம் 1ம் பிரதிவாதி கம்பெனியால் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

10.12.2018 ம் தேதியிட்ட இன்வாய்சில் சேம்பிள் பிலிம் கொடுக்கவேண்டும் என்று வாதி கம்பெனியால் கேட்கப்படவில்லை என்றால் எங்களுக்கு அது தேவையில்லை. சாம்பிள் பிலிமை கொடுத்துதான் இன்வாய்ஸ் ஆர்டர் செய்திருக்கவேண்டும் என்று வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.18 எங்கள் கம்பெனியால் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் என்றால் சரிதான். வா.சா.ஆ.18 மின்னஞ்சலில் 1ம் பிரதிவாதியின் கம்பெனிக்கு ஏற்பட்ட இழப்பை வாதி கம்பெனி சரிசெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18ல் 1ம் பிரதிவாதியின் கம்பெனிக்கு தகுந்தமாதிரியான தரத்தில் பொருட்கள் சப்ளை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.19 முதல் வா.சா.ஆ.23 வரையிலான மின்னஞ்சல்கள் சம்பந்தமாக எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. அவற்றை நான் படித்து பார்த்ததும் இல்லை. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மின்னஞ்சல்கள் சம்பந்தமாக சாட்சி சொல்வதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

நான் ஆய்வுக்கு சென்றபோது 1ம் பிரதிவாதிக்கு சம்பல்பூர் என்ற இடத்தில் ஒரு தொழிற்சாலை உள்ளது என்று தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். சம்பல்பூர்

தொழிற்சாலைக்கு நான் சென்றதில்லை. சம்பல்பூர் பிளாண்டில் எங்கள் பிலிம்ஸ் பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

28.07.2019 முதல் 02.08.2019 வரை எங்கள் கம்பெனியில் இருந்து அனுப்பிய பிலிம்களில் 6 முதல் 7 டன் எடையுள்ள சரக்குகளை பயன்படுத்தியுள்ளனர் என்று கூறுவது சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் ஆய்வுக்கு சென்றபோது பார்த்தேன். 1 கிலோ பிலிமிற்கு 410 முதல் 415 பவுச்சுகள் தயார் செய்யமுடியும். நாங்கள் 1ம் பிரதிவாதி கம்பெனிக்கு சுமாராக 20,000 கி பிலிம்கள் சப்ளை செய்தோம். மொத்தம் சப்ளை செய்யப்பட்ட 20,000 கி பிலிம்களில் 230 பவுச்சுகளில் ஒரு பவுச்சில் கசிவு இருப்பது என்பது அதிகமான அளவிலான கசிவு என்றால் சதவீதத்தின் அடிப்படையில் சரிதான். நாங்கள் கொடுக்கும் இன்வாய்சிலோ, மின்னஞ்சல்களிலோ கசிவு குறிப்பிட்ட சதவீதத்தில் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. கசிவு குறிப்பிட்ட சதவீதத்தில் அனுமதிக்கப்படும் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்த பிராதில் இன்வாய்ஸ் செய்யப்பட்ட பொருளில் கசிவு குறிப்பிட்ட சதவீதத்தில் அனுமதிக்கப்படும் என்று பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது.

எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும், எனது மூலம் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க எனக்கு அருகதை இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.